## 12th Geography Lesson 4 Questions in Tamil

## 4] தொழில்கள்

1) முதன் முதலாக ஓட்டுனர் உதவி இன்றி தானே இயங்கும் கார் எந்த ஆண்டு உருவானது?

A) 2011 ஆம் ஆண்டு

B) 2012 ஆம் ஆண்டு

C) 2013 ஆம் ஆண்டு

D) 2014 ஆம் ஆண்டு

2) பொருளாதார நடவடிக்கை என்பது?

A) பொருட்களை தயாரித்தல்

B) பொருட்களை வழங்குதல்

C) பொருட்களை வாங்குதல்

D) இவை அனைத்தும்

3) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – பொருளாதார நடவடிக்கைகள் முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம்நிலை தொழில்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

கூற்று 2 – மூன்றாம் நிலை தொழில் மேலும் இரு உட்பிரிவாக நான்காம்நிலை மற்றும் ஐந்தாம் நிலை தொழில் என பிரிக்கப்பட்டுள்ளது

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

C) இரண்டு கூற்றுகளும் சரி

D) இரண்டு கூற்றுகளும் தவறு

4) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – தன்நிறைவு பொருளாதாரம் என்பது சுய தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு மட்டுமே உற்பத்தி செய்ய இயலும் நிலை ஆகும்.

கூற்று 2 – வணிக பொருளாதாரம் என்பது விற்பனைக்காக மட்டுமே உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகும்.

கூற்று 3 – திட்டமிட்ட பொருளாதாரம் என்பது அரசாங்க நிறுவனங்களின் கட்டுப்பாட்டுடன் தயாரிக்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகும்.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லா கூற்றுகளும் சரி

5) கீழ்காணும் எந்தத் தொழில் முதல்நிலை தொழில் என கருதப்படுகிறது?

I. உணவு சேகரித்தல்

II. மேய்ச்சல், மீன் பிடித்தல்

III. சுரங்க தொழில்

A) I, II மட்டும்

B) II, III மட்டும்

C) I, III மட்டும்

D) இவை அனைத்தும்

6) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – உலகின் மொத்த மக்கள் தொகையில் 0.0001 சதவிகித மக்கள் மட்டுமே வேட்டையாடுபவர்களாகவும் மற்றும் உணவு சேகரிப்பவர்களாகவும் உள்ளனர்.

கூற்று 2 – வேட்டையாடுதல் மற்றும் உணவு சேகரித்தல் உலகின் பழமையான தொழில்களாகும்.

கூற்று 3 – பண்டைய மக்கள் விலங்குகளை வேட்டையாடுதல் மற்றும் தாவரங்களை சேகரித்தல் மூலம் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொண்டனர். உலகின் சில பகுதிகளில் இந்த முறை இன்றும் பயன்பாட்டில் உள்ளது.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லா கூற்றுகளும் சரி

7) உலகில் உணவு சேகரித்தல் தொழிலை மேற்கொள்பவர்கள் கீழ்காணும் எந்த பகுதியில் வாழ்பவர்கள் ஆவர்?

I. அமேசான் பள்ளத்தாக்கில் வாழ்வோர்

II. தெற்கு சிலி பகுதியினர்

III. யுரேஷியாவின் வடக்கு பகுதியினர்

IV. கனடாவின் வடக்கு பகுதியினர்

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, II, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

8) கீழ்க்கண்டவர்களில் நாடோடிகள் எனப்படுபவர்கள் யார்?

I. தென்னிந்தியாவின் பாலியன்கள்

II. ஆர்டிக் பிரதேசத்தின் இன்யூட்கள்

III. கலகாரி பாலைவனத்தின் பிக்மிக்கள்

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

9) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – விலங்கின உற்பத்திப் பொருட்களுக்காக ஆடு, மாடு, செம்மறி ஆடுகள் போன்ற விலங்குகளை வளர்ப்பது மேய்ச்சல் தொழில் என அழைக்கப்படுகிறது.

II. மேய்ச்சல் தொழிலானது விரிவாக இரண்டு பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

10) பழங்குடியினரின் மந்தை மேய்ச்சல் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – இது ஒரு பழமையான தன்னிறைவு வாழ்வு முறை ஆகும்.

கூற்று 2 – இந்த முறையில் மேய்ச்சல்காரர்கள் தங்களது உணவு, உடை, இருப்பிடம், கருவிகள் மற்றும் போக்குவரத்து ஆகிய தேவைகளுக்கு தாங்கள் வளர்க்கும் விலங்குகளை முழுவதுமாக சார்ந்திருப்பார்கள்.

கூற்று 3 – இவர்கள் நீர்நிலைகள் மற்றும் மேய்ச்சல் நிலங்களை தேடி தங்களது மந்தைகளோடு ஒரு இடம் விட்டு இடம் நகர்ந்து செல்வார்கள்.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லா கூற்றுகளும் சரி

11) பழங்குடியினரின் மந்தை மேய்ச்சல் கீழ்காணும் எந்த பகுதிகளில் காணப்படுகிறது?

A) மேற்கு ஆசியா

B) வடக்கு ஆப்பிரிக்கா

C) மேற்கு ஆப்பிரிக்கா

D) இவை அனைத்திலும்

12) கால்நடைகளுடன் இடம்பெயர்தல் முறை பற்றிய கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. கால்நடைகளுடன் இடம் பெயர்தல் என்னும் மேய்ச்சல் தொழிலில் ஈடுபடுபவர்கள் ஒவ்வொரு வருடமும் கோடை காலத்திலும், குளிர் காலத்திலும் தங்கள் மந்தையுடன் நிலையான புல்வெளிகளை நோக்கி நகருகின்றனர்.

II. கோடைக்காலத்தில் உயரமான பகுதிகளை நோக்கியும், குளிர்காலத்தில் பள்ளத்தாக்கு பகுதிகளையும் நோக்கி இவர்கள் இடம் பெயர்வர்.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

13) கால்நடைகளுடன் இடம்பெயர்தல் என்னும் முறையைப் பின்பற்றும் பழங்குடியினர் யார்?

I. குஜ்ஜார்கள்

II. பாக்கர்வாலாக்கள்

III. போட்டியாக்கள்

A) I, II மட்டும்

B) II, III மட்டும்

C) I, III மட்டும்

D) இவர்கள் அனைவரும்

14) கீழ்க்கண்டவற்றுள் எது வணிக விவசாயத்தின் துணைப்பிரிவு அல்ல?

A) பரந்த விவசாயம்

B) தீவிர விவசாயம்

C) கலப்பு விவசாயம்

D) தோட்டப்பயிர் விவசாயம்

15) ஆப்பிரிக்காவின் அயன மண்டலப் பகுதிகளில் பின்பற்றப்படும் வேளாண்மை முறை எது?

A) இடம் பெயரும் வேளாண்மை

B) தன்னிறைவு வேளாண்மை

C) தீவிர வேளாண்மை

D) பரந்த வேளாண்மை

16) விவசாயிகள் தங்கள் குடும்பங்களுக்கும் தங்களுக்கும் தேவையான வேளாண் பொருட்களை மட்டும் உற்பத்தி செய்து கொள்வது?

A) இடம் பெயரும் வேளாண்மை

B) தன்னிறைவு வேளாண்மை

C) தீவிர வேளாண்மை

D) பரந்த வேளாண்மை

17) கீழ்க்காணும் எந்த வேளாண் முறையில் ஒரு சிறிய நிலப்பரப்பு ஒரு ஆண்டில் இரண்டு அல்லது மூன்று முறை சாகுபடி செய்யப்படுகிறது?

A) இடம் பெயரும் வேளாண்மை

B) தன்னிறைவு வேளாண்மை

C) தீவிர வேளாண்மை

D) பரந்த வேளாண்மை

18) குறைவாக விளை நிலம் உள்ள இடங்களில் செய்யப்படும் வேளாண்மை கீழ்க்கண்டவற்றுள் எது?

A) இடம் பெயரும் வேளாண்மை

B) தன்னிறைவு வேளாண்மை

C) தீவிர வேளாண்மை

D) பரந்த வேளாண்மை

19) வேளாண்மை பெயர்களையும் அது பின்பற்றப்படும் பகுதிகளையும் பொருத்துக.

I. ஜீமிங் – a) மத்திய அமெரிக்கா

II. லடாங் – b) பிலிப்பைன்ஸ்

III. செங்கின் – c) வட கிழக்கு இந்திய மாநிலங்கள்

IV. மில்பா – d) மலேசியா

A) I–c, II–d, III–b, IV–a

B) I–d, II–b, III–a, IV–c

C) I–c, II–b, III–a, IV–d

D) I–a, II–d, III–c, IV–b

20) வேளாண்மை பெயர்களையும் அது பின்பற்றப்படும் பகுதிகளையும் பொருத்துக.

I. கொனுக்கோ – a) வியட்நாம்

II. ரோக்கா – b) வெனிசுலா

III. மசோல் – c) பிரேசில்

IV. ரே – d) காங்கோ

A) I–b, II–c, III–d, IV–a

B) I–d, II–b, III–a, IV–c

C) I–c, II–b, III–a, IV–d

D) I–a, II–d, III–c, IV–b

21) வேளாண்மை பெயர்களையும் அது பின்பற்றப்படும் பகுதிகளையும் பொருத்துக.

I. ரே – a) மியான்மர்
II. ஹீமா – b) வியட்நாம்
III. தாங்கியா – c) இலங்கை
IV. சென் – d) இந்தோனேஷியா
A) I–b, II–d, III–a, IV–c
B) I–d, II–b, III–a, IV–c
C) I–c, II–b, III–a, IV–d
D) I–a, II–d, III–c, IV–b

22) லாபம் கருதி பயிர்கள் வளர்க்கப்படும் வேளாண்மைமுறை எவ்வாறு அழைக்கப்படுகிறது?
A) இடம் பெயரும் வேளாண்மை
B) தன்னிறைவு வேளாண்மை
C) தோட்டப்பயிர் வேளாண்மை.
D) பரந்த வேளாண்மை

23) கீழ்க்கண்டவற்றுள் எது தோட்டப்பயிர் அல்ல?
A) கரும்பு
B) வாழைப்பழம்
C) ரப்பர்
D) பருத்தி

24) சாகுபடி அளவு அதிகமாக உள்ள இடங்களில் செய்யும் வேளாண்மை எவ்வாறு அழைக்கப்படுகிறது?
A) இடம் பெயரும் வேளாண்மை
B) தன்னிறைவு வேளாண்மை
C) தோட்டப்பயிர் வேளாண்மை.
D) பரந்த வேளாண்மை

25) பல்வேறு விவசாய நடவடிக்கைகளை கலந்து செய்யும் வேளாண்மை எவ்வாறு அழைக்கப்படுகிறது?
A) இடம் பெயரும் வேளாண்மை
B) கலப்பு வேளாண்மை
C) தோட்டப்பயிர் வேளாண்மை.
D) பரந்த வேளாண்மை

26) பொருத்துக
I. போமோலஜி – a) பூக்கள் வளர்ப்பு
II. ஃபோலரி கல்ச்சர் – b) பட்டுப்புழு வளர்த்தல்
III. செரிக்கல்ச்சர் – c) திராட்சை சாகுபடி
IV. விட்டி கல்ச்சர் – d) பழங்கள் சாகுபடி
A) I–d, II–a, III–b, IV–c
B) I–d, II–b, III–a, IV–c
C) I–c, II–b, III–a, IV–d
D) I–a, II–d, III–c, IV–b

27) மத்திய தரைக்கடல் வேளாண்மை கீழ்காணும் எந்த இடங்களில் பின்பற்றப்படுகிறது?
I. துனிசியாவில் இருந்து அட்லாண்டிக் பெருங்கடல் வரையிலும்
II. தெற்கு கலிபோர்னியா, மத்திய சிலி போன்ற பகுதிகளில்
III. தென்னாபிரிக்காவின் தென் மேற்கு பகுதியில்
A) I, II மட்டும் சரி
B) II, III மட்டும் சரி
C) I, III மட்டும் சரி
D) எல்லாமே சரி

28) சிட்ரஸ் வகை பழங்கள் மற்றும் திராட்சை சாகுபடிக்கு பெயர்பெற்ற வேளாண்மை முறை எது?
A) இடம் பெயரும் வேளாண்மை
B) கலப்பு வேளாண்மை
C) தோட்டப்பயிர் வேளாண்மை.
D) மத்திய தரைக்கடல் வேளாண்மை

29) மத்திய தரைக்கடல் வேளாண்மை பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?
கூற்று 1 – பல்வேறு நறுமணங்களில் கிடைக்கும் உலகின் புகழ்வாய்ந்த திராட்சைரசம் இப்பகுதியில் பயிராகும் உயர்தர திராட்சை பழங்களில் இருந்து தயாரிக்கப்படுகிறது.
கூற்று 2 – மத்திய தரைக்கடல் பகுதியில் ஆலிவ் பழங்களும், அத்திப் பழங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.
கூற்று 3 – ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா சந்தைகளில் அதிகமாக தேவைப்படும் விலைமதிப்புள்ள பழங்களும், காய்கறிகளும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.
A) கூற்று 1, 2 மட்டும் சரி
B) கூற்று 2, 3 மட்டும் சரி
C) கூற்று 1, 3 மட்டும் சரி
D) எல்லா கூற்றுகளும் சரி

30) சரக்கு வண்டி விவசாயம் என்று அழைக்கப்படுவது எது?
A) இடம் பெயரும் வேளாண்மை
B) கலப்பு வேளாண்மை
C) தோட்டப்பயிர் வேளாண்மை.
D) தோட்டக்கலை

31) தோட்டக்கலை விவசாயம் நடைபெறும் முக்கிய பகுதிகளாவன கீழ்க்கண்டவற்றுள் எது?
I. மேற்கு ஐரோப்பா
II. வடகிழக்கு அமெரிக்க ஐக்கிய நாடுகள்
III. மத்திய தரைக்கடல் நாடுகள்
A) I, II மட்டும் சரி
B) II, III மட்டும் சரி
C) I, III மட்டும் சரி
D) எல்லாமே சரி

32) வான்தூனன் (Von Thunen) வேளாண் மாதிரி எந்த ஆண்டு வெளியானது?
A) 1822 ஆம் ஆண்டு
B) 1824 ஆம் ஆண்டு
C) 1826 ஆம் ஆண்டு
D) 1828 ஆம் ஆண்டு

33) வான்தூனனின் தனித்தபகுதி (Isolated State) வேளாண் மாதிரி, கொண்டுள்ள அனுமானங்களில் எது தவறானது?

A) இது தனித்த நிலை ஆக்கிரமிப்பற்ற காடுகளால் சூழப்பட்டு காணப்படுகிறது.

B) இப்பகுதி முழுவதும் ஒரே சீரான மண்ணின் தன்மையும், காலநிலையும் கொண்டுள்ளது.

C) விவசாயிகள் குறைந்தபட்ச லாபத்திற்காக செயல்படுகிறார்கள்.

D) இந்த நிலப் பகுதி முழுவதும் ஆறுகளாலோ, மலைகளாலோ குறுக்கிடாத சமமான புவிப்பரப்பை கொண்டுள்ளது.

34) வான்தூனனின் வேளாண் மாதிரி எத்தனை வளையங்களை கொண்டது?

A) ஐந்து வளையங்கள்

B) நான்கு வளையங்கள்

C) மூன்று வளையங்கள்

D) இரண்டு வளையங்கள்

35) வான் தூனனின் கீழ்க்காணும் எந்த வளையத்தில் பால் பண்ணையும், தீவிர விவசாய முறையும் காணப்படும்?

A) முதல் வளையம்

B) இரண்டாம் வளையம்

C) மூன்றாம் வளையம்

D) நான்காம் வளையம்

36) கீழ்க்காணும் எந்த வளையப் பகுதியில் நிலத்தின் விலை அதிகமாக இருக்கும்?

A) முதல் வளையம்

B) இரண்டாம் வளையம்

C) மூன்றாம் வளையம்

D) நான்காம் வளையம்

37) எரிபொருள் தேவைக்காகவும் கட்டிட வேலைக்காகவும் மரங்கள் கீழ்காணும் எந்த வளையபகுதியில் உற்பத்தி செய்யப்படுகின்றன?

A) முதல் வளையம்

B) இரண்டாம் வளையம்

C) மூன்றாம் வளையம்

D) நான்காம் வளையம்

38) பரந்த அளவில் கோதுமை சாகுபடி செய்யப்படும் வளைய பகுதி எது?

A) முதல் வளையம்

B) இரண்டாம் வளையம்

C) மூன்றாம் வளையம்

D) நான்காம் வளையம்

39) பண்ணை நிலங்கள் அமைந்திருக்கக் கூடிய வளைய பகுதி எது?

A) முதல் வளையம்

B) இரண்டாம் வளையம்

C) மூன்றாம் வளையம்

D) நான்காம் வளையம்

40) கீழ்க்காணும் நான்கு வளைய பகுதிகளில் நகர மையத்தில் இருந்து வெகு தொலைவில் அமையக்கூடிய வளைய பகுதி எது?

A) முதல் வளையம்

B) இரண்டாம் வளையம்

C) மூன்றாம் வளையம்

D) நான்காம் வளையம்

41) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – வான் தூனனின் கோட்பாட்டின்படி நகரத்தின் மையத்தை நோக்கி செல்ல செல்ல நிலத்தின் விலை அதிகரிக்கிறது.

கூற்று 2 – வான் தூனனின் கோட்பாடு நிலத்தின் மதிப்பிற்கும் போக்குவரத்து செலவிற்கும் இடையில் நடுநிலைமையை மிகச் சிறப்பாக வெளிப்படுத்துகிறது.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

C) இரண்டு கூற்றுகளும் சரி

D) இரண்டு கூற்றுகளும் தவறு

42) புவியிலிருந்து உலோகங்களை வெட்டி எடுக்கும் செயல்முறையை எவ்வாறு அழைக்கிறோம்?

A) கனிமத்தொழில்

B) சுரங்கத்தொழில்

C) உலோகத்தொழில்

D) எல்லாமே தவறு

43) கீழ்காணும் எந்தவகை சுரங்கங்கள் ஆயிரம்மீட்டர் வரை ஆழம் உடையது?

A) திறந்தவெளி சுரங்கங்கள்

B) மேற்பரப்பு சுரங்கங்கள்

C) நிலத்தடி சுரங்கங்கள்

D) கரைசல்முறை சுரங்கங்கள்

44) கீழ்காணும் எந்தவகை சுரங்கங்கள் 70% வளமற்ற நிலத்தையும், கழிவு பாறைகளையும் ஏற்படுத்துகிறது?

A) திறந்தவெளி சுரங்கங்கள்

B) மேற்பரப்பு சுரங்கங்கள்

C) நிலத்தடி சுரங்கங்கள்

D) கரைசல்முறை சுரங்கங்கள்

45) தண்டு வடிவ சுரங்கங்கள் என்று அழைக்கப்படுவது எது?

A) திறந்தவெளி சுரங்கங்கள்

B) மேற்பரப்பு சுரங்கங்கள்

C) நிலத்தடி சுரங்கங்கள்

D) கரைசல்முறை சுரங்கங்கள்

46) கீழ்க்காணும் எந்த சுரங்கங்களில் பணிபுரிவோருக்கு அதிக ஆபத்துகள் ஏற்பட வாய்ப்பு அதிகம்?

A) திறந்தவெளி சுரங்கங்கள்

B) மேற்பரப்பு சுரங்கங்கள்

C) நிலத்தடி சுரங்கங்கள்

D) கரைசல்முறை சுரங்கங்கள்

47) யுரேனிய படிவுகள் காணப்படும் இடங்களில் பின்பற்றப்படும் சுரங்க முறை எது?
A) திறந்தவெளி சுரங்கங்கள்
B) மேற்பரப்பு சுரங்கங்கள்
C) நிலத்தடி சுரங்கங்கள்
D) கரைசல்முறை சுரங்கங்கள்

48) உற்பத்தி மற்றும் தொழில்துறை நடவடிக்கைகள் கீழ்காணும் எந்த நிலை தொழிலில் அடங்கும்?
A) முதல் நிலை தொழில்
B) இரண்டாம் நிலை தொழில்
C) மூன்றாம் நிலை தொழில்
D) இவை எதுவும் அல்ல

49) மதிப்புக்கூட்டு துறை என அழைக்கப்படும் நிலை தொழில் எது?
A) முதல் நிலை தொழில்
B) இரண்டாம் நிலை தொழில்
C) மூன்றாம் நிலை தொழில்
D) இவை எதுவும் அல்ல

50) தொழிலக அமைவிடத்தை நிர்ணயிக்கும் காரணி எது?
A) மூலப் பொருட்களின் இருப்பு மற்றும் அதன் அருகாமை
B) எரிசக்தி
C) போக்குவரத்து செலவு
D) இவை அனைத்தும்

51) கீழ்கண்டவற்றுள் எது தொழிலக அமைவிடத்தை நிர்ணயிக்கும் காரணி அல்ல?
A) மூலப் பொருட்களின் இருப்பு மற்றும் அதன் அருகாமை (Availability of Raw Materials)
B) எரிசக்தி (Availability of Power)
C) அரசாங்க கொள்கைகள் (Government Policies)
D) தொழிலாளர்களின் சம்பளம் (Salary to Labours)

52) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?
கூற்று 1 – மூலப்பொருள்கள் அதிகமாகவும் மற்றும் விலை குறைவாகவும் கிடைக்கும் இடங்களில் தொழிற்சாலைகள் அமைக்கப்படுகின்றன.
கூற்று 2 – அலுமினிய தொழிற்சாலைகள் நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் இடங்களுக்கு அருகாமையில் அமைக்கப்படுகின்றன.
A) கூற்று 1 மட்டும் சரி
B) கூற்று 2 மட்டும் சரி
C) இரண்டு கூற்றுகளும் சரி
D) இரண்டு கூற்றுகளும் தவறு

53) விசாகப்பட்டினத்தில் எண்ணெய் சுத்தகரிப்பு தொழிற்சாலை அமைந்துள்ள காரணம் என்ன?
I. விசாகப்பட்டினம் துறைமுகம் வழியே எண்ணெய் அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.
II. விசாகப்பட்டினம் தொழிற்சாலைக்கு தேவையான மூலப்பொருள் அதன் அருகாமையில் கிடைப்பதால்.
A) I மட்டும் சரி
B) II மட்டும் சரி
C) இரண்டும் சரி
D) இரண்டும் தவறு

54) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?
கூற்று 1 – எந்த பகுதியில் போக்குவரத்து செலவு குறைவாக உள்ளதோ அங்கு தொழிற்சாலைகளை தொடங்குவது நல்ல முடிவாகும்.
கூற்று 2 – அதிக எடை மற்றும் அதிக இடத்தையும் அடைத்துக் கொள்ளும் மூலப் பொருட்களை எடுத்துச் செல்ல போக்குவரத்து செலவு அதிகமாகும்.
A) கூற்று 1 மட்டும் சரி
B) கூற்று 2 மட்டும் சரி
C) இரண்டு கூற்றுகளும் சரி
D) இரண்டு கூற்றுகளும் தவறு

55) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?
கூற்று 1 – ஒரு தொழிற்சாலை அமைப்பதை நிர்ணயிப்பதில் சந்தைக்கு அருகாமை என்பது ஒரு முதன்மைக் காரணி ஆகும்.
கூற்று 2 – தொழிற்சாலை அமைப்பதை, அதிக அளவு தொழிலாளர்கள் காணப்படும் பகுதி முடிவு செய்கிறது.
A) கூற்று 1 மட்டும் சரி
B) கூற்று 2 மட்டும் சரி
C) இரண்டு கூற்றுகளும் சரி
D) இரண்டு கூற்றுகளும் தவறு

56) மும்பைக்கு அருகில் காணப்படும் அதிக அளவு பருத்தி நெசவாலைகள் கீழ்க்காணும் எந்த காரணத்தால் அமைந்துள்ளது?
A) போக்குவரத்து செலவு குறைவு
B) தொழிலாளர்களின் இருப்பு
C) மூலதனம் குறைவு
D) அரசாங்க கொள்கைகள்

57) ஒரு தொழிலகம் அமைப்பதற்கு அரசாங்கம் கீழ்க்காணும் எந்த வசதிகளை செய்து தருகிறது?
I. நிதி உதவி
II. நிலம்
III. நீர்
IV. போக்குவரத்து
A) I, II மட்டும்
B) II, III மட்டும்
C) III, IV மட்டும்
D) இவை அனைத்தும்

58) ஒரு தொழிலகம் அமைப்பதற்கு அரசாங்கம் கீழ்க்காணும் எந்த வசதிகளை செய்து தருகிறது?
I. சந்தைக்கான ஆலோசனைகள்
II. வரிச்சலுகை
III. ஏற்றுமதி–இறக்குமதி வசதிகள்
A) I, II மட்டும்

B) II, III மட்டும்

C) I, III மட்டும்

D) இவை அனைத்தும்

59) குறைந்த செலவு கொள்கையை வலியுறுத்தும் கோட்பாட்டினை வகுத்தவர் யார்?

A) வான் தூனன்

B) வெபர்

C) வில்லியம் ஷா

D) இவர்கள் யாரும் அல்ல

60) வெபரின் தொழிலக அமைவிட கோட்பாட்டின் (Weber's Theory of Location) கீழ்காணும் அனுமானங்களில் எது தவறானது?

A) சந்தை சில குறிப்பிட்ட இடங்களில் மட்டும் காணப்படும்.

B) சில மூலப்பொருட்கள் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் கிடைக்கக்கூடியவை. ஆனால் நீர் போன்றவை எங்கும் காணக் கூடியது.

C) உற்பத்தி பொருட்களுக்கு சந்தையில் குறைவான போட்டி காணப்படுகிறது.

D) போக்குவரத்து செலவு மூலப்பொருட்களின் எடையையும், தூரத்தையும் அடிப்படையாகக்கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது.

61) குறைந்த செலவில் அதிக லாபம் என்ற கருத்தை வகுத்தவர் யார்?

A) வான் தூனன்

B) வெபர்

C) வில்லியம் ஷா

D) கீன்ஸ்

62) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – சில தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் உற்பத்தி பொருட்களின் எடை மூலப்பொருட்களின் எடையைக் காட்டிலும் குறைவாக இருக்கும்.

கூற்று 2 – எடை இழக்கும் கச்சாப் பொருட்கள் எனப்படுபவை தொழிற்சாலைக்கு கொண்டு வருவதற்கான போக்குவரத்து செலவு, அதனை உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சந்தைக்கு கொண்டு சேர்ப்பதற்கான செலவைக் காட்டிலும் அதிகம்.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

C) இரண்டு கூற்றுகளும் சரி

D) இரண்டு கூற்றுகளும் தவறு

63) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – ஒரு தொழிலகம் மூலப் பொருட்கள் கிடைக்கும் இடத்திற்கு மத்தியில் அமையும் பொழுது போக்குவரத்து செலவு கணிசமான அளவு குறைகிறது.

கூற்று 2 – ஒரு தொழிலகம் மூலப் பொருட்கள் கிடைக்கும் இடத்திற்கு மத்தியில் அமையும் பொழுது உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை எடுத்துச்செல்லும் செலவு குறைவாக உள்ளது.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

C) இரண்டு கூற்றுகளும் சரி

D) இரண்டு கூற்றுகளும் தவறு

64) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – கச்சாப் பொருள்கள் எடை குறைவாக இருந்தால் அதனை தொழிலகத்திற்கு எடுத்து செல்லும் போக்குவரத்து செலவு குறைகிறது.

கூற்று 2 – உற்பத்தி செய்யப்பட்டபின் பொருட்களின் எடை அதிகரிக்கும் தன்மை உடையது என்றால் அத்தகைய தொழிற்சாலைகள் சந்தைக்கு அருகில் அமைவது, போக்குவரத்து செலவை குறைக்கும்.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

C) இரண்டு கூற்றுகளும் சரி

D) இரண்டு கூற்றுகளும் தவறு

65) தொழிற்சாலைகள் கனரக மற்றும் எடை குறைவான தொழிற்சாலைகள் என கீழ்காணும் எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது?

A) தொழிலாளர்களின் அடிப்படையில்

B) மூலப்பொருட்கள் அடிப்படையில்

C) முதலீட்டாளர்கள் அடிப்படையில்

D) மூலப்பொருட்களின் ஆதார அடிப்படையில்

66) பெரிய அளவு, சிறிய அளவு, நடுத்தர அளவு என்று தொழிற்சாலைகள் கீழ்க்காணும் எந்த காரணங்களால் வகைப்படுத்தப்படுகிறது?

A) தொழிலாளர்களின் அடிப்படையில்

B) மூலப்பொருட்கள் அடிப்படையில்

C) முதலீட்டாளர்கள் அடிப்படையில்

D) மூலப்பொருட்களின் ஆதார அடிப்படையில்

67) தொழிற்சாலைகள் முதலீட்டாளர்கள் அடிப்படையில் வகைப்படுத்தப்படுவனவற்றுள் கீழ்க்கண்டவற்றில் எது சரி?

I. தனியார் துறை

II. பொதுத்துறை

III. கூட்டுறவு துறை

IV. பன்னாட்டு நிறுவனங்கள்

A) I, II மட்டும் சரி

B) I, II, III மட்டும் சரி

C) III, IV மட்டும் சரி

D) எல்லாமே சரி

68) தொழிற்சாலைகள் மூலப்பொருட்களின் ஆதார அடிப்படையில் கீழ்காணும் எந்தவகையில் வகைப்படுத்தப்படுகிறது?

I. வேளாண் பொருட்கள்

II. கனிமங்கள்

III. ரசாயனங்கள்

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

69) தொழிற்சாலைகளின் வகைகளை பொருத்துக.

I. தொழிலாளர்கள் அடிப்படையில் – a) வேளாண் பொருட்கள்

II. மூலப்பொருட்கள் அடிப்படையில் – b) கூட்டுறவு துறை

III. முதலீட்டாளர்கள் அடிப்படையில் – c) நடுத்தர அளவு

IV. மூலப்பொருட்களின் ஆதார அடிப்படையில் – d) கனரக

A) I–c, II–d, III–b, IV–a

B) I–b, II–a, III–d, IV–c

C) I–c, II–a, III–b, IV–d

D) I–d, II–a, III–c, IV–b

70) பருத்தி மற்றும் சணல் தொழிற்சாலைகள் கீழ்காணும் எந்த வகை தொழிற்சாலைகள் ஆகும்?

A) பெரிய அளவு தொழிற்சாலைகள்

B) சிறிய அளவு தொழிற்சாலைகள்

C) நடுத்தர அளவு தொழிற்சாலைகள்

D) கனரக தொழிற்சாலைகள்

71) மிதிவண்டி மற்றும் வானொலி போன்ற தொழிற்சாலைகள் எந்த வகையில் அடங்கும்?

A) பெரிய அளவு தொழிற்சாலைகள்

B) சிறிய அளவு தொழிற்சாலைகள்

C) நடுத்தர அளவு தொழிற்சாலைகள்

D) கூட்டுறவு துறை தொழிற்சாலைகள்

72) தீப்பெட்டி நெசவு செய்தல் போன்றவை எந்தவகை தொழிற்சாலைகளின் கீழ் அடங்கும்?

A) பெரிய அளவு தொழிற்சாலைகள்

B) சிறிய அளவு தொழிற்சாலைகள்

C) நடுத்தர அளவு தொழிற்சாலைகள்

D) இவை எதுவும் அல்ல

73) மண்பாண்டம் தயாரித்தல் என்பதைக் கீழ்க்காணும் எந்த தொழிற்சாலைகளின் வகைகளுள் அடங்கும்?

A) பெரிய அளவு தொழிற்சாலை

B) குடிசை தொழில்

C) வேளாண் பொருள் தொழிற்சாலை

D) இவை எதுவும் அல்ல

74) இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகள் கீழ்க்காணும் எவற்றுக்கு உதாரணமாகும்?

A) கனரக தொழிற்சாலை

B) தனியார்துறை தொழிற்சாலை

C) சிறிய அளவு தொழிற்சாலை

D) பன்னாட்டு நிறுவனத் தொழிற்சாலை

75) பொருத்துக.

I. தனியார்துறை தொழிற்சாலைகள் – a) இந்திய எண்ணெய் நிறுவனம்

II. பொதுத்துறை தொழிற்சாலைகள் – b) சர்க்கரை ஆலைகள்

III. கலப்பு துறை தொழிற்சாலைகள் – c) பஜாஜ் ஆட்டோ

IV. கூட்டுறவு சங்க தொழிற்சாலைகள் – d) துர்காபூர் இரும்பு உருக்காலை

A) I–c, II–d, III–a, IV–b

B) I–b, II–a, III–d, IV–c

C) I–c, II–a, III–b, IV–d

D) I–d, II–a, III–c, IV–b

76) பொருத்துக.

I. தனியார்துறை தொழிற்சாலைகள் – a) பாரத மிகுமின் நிறுவனம் (BHEL)

II. பொதுத்துறை தொழிற்சாலைகள் – b) டிஸ்கோ(TISCO)

III. கலப்பு துறை தொழிற்சாலைகள் – c) சர்க்கரை ஆலைகள்

IV. கூட்டுறவு சங்க தொழிற்சாலைகள் – d) குஜராத் வெடியுப்பு லிமிடெட்

A) I–b, II–a, III–d, IV–c

B) I–b, II–d, III–c, IV–a

C) I–c, II–a, III–b, IV–d

D) I–d, II–a, III–c, IV–b

77) பொருத்துக

I. சிறிய அளவு தொழிற்சாலைகள் – a) மண்பாண்டம் செய்தல்

II. பெரிய அளவு தொழிற்சாலைகள் – b) சாயத் தொழிற்சாலை

III. நடுத்தர அளவு தொழிற்சாலைகள் – c) மிதிவண்டி தொழிற்சாலை

IV. குடிசைத்தொழில் – d) பருத்தி மற்றும் சணல் தொழிற்சாலை

A) I–b, II–d, III–c, IV–a

B) I–b, II–d, III–a, IV–c

C) I–c, II–a, III–b, IV–d

D) I–d, II–a, III–c, IV–b

78) கீழ்க்கண்டவற்றுள் எது வேளாண் பொருள்சார் தொழிற்சாலை அல்ல?

A) பருத்தி நெசவு தொழிற்சாலைகள்

B) தாவர எண்ணெய் தயாரித்தல்

C) சணல் தொழிற்சாலைகள்

D) தோல் தொழிற்சாலைகள்

79) கீழ்கண்டவற்றுள் எது கனிமம்சார் தொழிற்சாலை அல்ல?

A) இரும்பு எஃகு தொழிற்சாலை

B) அலுமினிய தொழிற்சாலை

C) எலும்பு மற்றும் கொம்புகள் தொழிற்சாலை

D) சிமெண்ட் தொழிற்சாலை

80) காடுகளில் கிடைக்கும் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளுள் அல்லாதது எது?

A) காகித தொழிற்சாலை

B) அரக்கு தொழிற்சாலை

C) கூடை தயாரிக்கும் தொழிற்சாலை

D) பால்பண்ணை பொருட்கள் தொழிற்சாலை.

81) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – அடிப்படை தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் பொருட்கள் மற்றும் தொழிற்சாலைக்கு தேவையான மூலப் பொருட்களாக இருக்கும்.

கூற்று 2 – தொலைக்காட்சிப் பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலை அடிப்படை தொழிற்சாலைக்கு எடுத்துக்காட்டு ஆகும்.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

C) இரண்டு கூற்றுகளும் சரி

D) இரண்டு கூற்றுகளும் தவறு

82) சேவைத் தொழில் அல்லது சேவை துறை என அழைக்கப்படுவது எது?

A) முதல் நிலை தொழில்

B) இரண்டாம் நிலை தொழில்

C) மூன்றாம் நிலை தொழில்

D) இவை எதுவும் அல்ல

83) கீழ்க்கண்டவற்றுள் எது மூன்றாம் நிலை தொழில் ஆகும்?

I. மருத்துவம்

II. கல்வி

III. சட்டம்

IV. ஆட்சிப்பணி

A) I, II மட்டும்

B) I, II, III மட்டும்

C) II, III, IV மட்டும்

D) இவை அனைத்தும்

84) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – பெரும்பாலான மூன்றாம் நிலை தொழில்கள் உயர் திறன் உடைய பணியாளர்கள், தொழில் பயிற்சி பெற்றவர்கள் மற்றும் ஆலோசகர்களால் செயல்படுத்தப்படுகிறது.

கூற்று 2 – மூன்றாம் நிலை தொழில்கள் பொருள்களின் உற்பத்தியை விட சேவைகளின் வர்த்தகரீதியான வெளியீடுகளை கொண்டுள்ளது.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

C) இரண்டு கூற்றுகளும் சரி

D) இரண்டு கூற்றுகளும் தவறு

85) கீழ்க்கண்டவற்றுள் எது நான்காம் நிலை தொழிலுக்கு எடுத்துக்காட்டு அல்ல?

A) அறிவியல் ஆராய்ச்சி

B) கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்பம்

C) நூலகம்

D) மருத்துவம்

86) தங்க கழுத்துப்பட்டை பணியாளர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் எந்த நிலை தொழிலில் உள்ளவர்களாவர்?

A) இரண்டாம் நிலை தொழில்

B) மூன்றாம் நிலை தொழில்

C) நான்காம் நிலை தொழில்

D) ஐந்தாம் நிலைத் தொழில்

87) ஐந்தாம் நிலை தொழில்கள் பற்றிய கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – ஐந்தாம் நிலை தொழிலில் ஈடுபடும் பிரிவினர் அதிக ஊதியம் பெற்ற நிபுணர்களாக, ஆராய்ச்சி அறிவியலாளர்கள், அரசுத்துறை அதிகாரிகளாக இருப்பார்கள்.

கூற்று 2 – ஐந்தாம் நிலை தொழிலாளர்கள் உயர்பதவிகளில் அதிக அதிகாரங்களுடன் நியமிக்கப்படுகிறார்கள்.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

C) இரண்டு கூற்றுகளும் சரி

D) இரண்டு கூற்றுகளும் தவறு

88) ஐக்கிய நாடுகள் சபை உலக நாடுகளை எத்தனை பெரும் பிரிவாக பிரித்துள்ளது?

A) இரண்டு பெரும் பிரிவுகளாக

B) மூன்று பெரும் பிரிவுகளாக

C) நான்கு பெரும் பிரிவுகளாக

D) ஐந்து பெரும் பிரிவுகளாக

89) தென் கிழக்கு ஐரோப்பா, காமன்வெல்த் நாடுகள் என்பது கீழ்க்காணும் எந்த பிரிவினுள் அடங்கும்?

A) வளர்ச்சி அடைந்த நாடுகள்

B) வளரும் நாடுகள்

C) பொருளாதார மாற்ற நிலையில் உள்ள நாடுகள்

D) இவை எதுவும் அல்ல

90) உலக நாடுகளை வகைப்படுத்துவதற்கு கீழ்காணும் எவை அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்படுகிறது?

I. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)

II. மொத்த தேசிய உற்பத்தி (GNP)

III. தனிநபர் வருமானம்

IV. தொழில்மயமாதல்

A) I, II மட்டும்

B) I, II, III மட்டும்

C) III, IV மட்டும்

D) இவை அனைத்தும்

91) வளர்ச்சி அடைந்த நாடுகள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) தொழில் வளர்ச்சி அடைந்த நாடு

B) அதிக வளர்ச்சி அடைந்த நாடு

C) அதிக வளர்ந்துவிட்ட பொருளாதாரத்தை கொண்ட நாடு

D) இவை அனைத்தும் சரி

92) 2015ஆம் ஆண்டில் உலக மொத்த உற்பத்தியில் (GDP) வளர்ச்சி அடைந்த நாடுகளின் பங்களிப்பு எத்தனை சதவீதம் ஆகும்?

A) 50 சதவீதம்

B) 60 சதவீதம்

C) 70 சதவீதம்

D) 80 சதவீதம்

93) பன்னாட்டு நிதியத்தின் கூற்றுப்படி கீழ்க்கண்டவற்றுள் எது வளர்ச்சியடைந்த நாடு அல்ல?

A) ஜப்பான்

B) தென்கொரியா

C) இந்தியா

D) ஜெர்மனி

94) பொருளாதார மாற்ற நிலையில் உள்ள நாடுகள் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – மூலாதார மாற்றம் அடைந்து வரும் நாடுகள் என்பவை மையப்படுத்தப்பட்ட, திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தில் இருந்து சந்தை பொருளாதாரத்திற்கு மாறி வரும் நாடுகளை குறிக்கும்..

கூற்று 2 – பொருளாதார மாற்ற நிலையில் உள்ள நாடுகள் தங்களது பொருளாதார கட்டமைப்பை, சந்தையை அடிப்படையைக் கொண்ட நிறுவனங்களாக மாற்றும் நோக்கம் உடையவை.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

C) இரண்டு கூற்றுகளும் சரி

D) இரண்டு கூற்றுகளும் தவறு

95) வளர்ச்சி குன்றிய நாடு எனப்படுவது கீழ்க்காணும் எந்த பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்?

I. தொடர்ந்து ஒரு நாட்டில் மூன்று ஆண்டிற்கு மேல் தனிநபர் வருமானம் குறைந்து காணப்படுவது.

II. மனிதவள குறைபாடு

III. பொருளாதார ரீதியாக பாதிப்படைதல்.

A) I மட்டும் சரி

B) I, II மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

96) 2018 ஆம் ஆண்டின் கணக்குப்படி ஒரு நாட்டின் தனி நபர் வருமானம் ஆண்டிற்கு ______________ இருந்தால் அந்த நாடு வளர்ச்சி குன்றிய நாடு எனக் கருதப்படும்.

A) 825 அமெரிக்க டாலருக்கு குறைவாக

B) 925 அமெரிக்க டாலருக்கு குறைவாக

C) 1025 அமெரிக்க டாலருக்கு குறைவாக

D) 1125 அமெரிக்க டாலருக்கு குறைவாக

97) உலக வங்கியின் சமீபத்திய புள்ளி விவரத்தின் படி எந்த நாடு பொருளாதாரத்தில் உலகின் மிகப்பெரிய நாடு ஆகும்?

A) சீனா

B) ரஷ்யா

C) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

D) கனடா

98) உலகப் பொருளாதாரத்தின் பங்களிப்பினை அதன் நாடுகளுடன் பொருத்துக.

I. சீனா – a) 2 ட்ரில்லியன் அமெரிக்க டாலர்

II. ஜெர்மனி – b) 11 ட்ரில்லியன் அமெரிக்க டாலர்

III. இந்தியா – c) 4.4 ட்ரில்லியன் அமெரிக்க டாலர்

IV. ஜப்பான் – d) 2.2 ட்ரில்லியன் அமெரிக்க டாலர்

A) I–b, II–d, III–c, IV–a

B) I–b, II–d, III–a, IV–c

C) I–c, II–a, III–b, IV–d

D) I–d, II–a, III–c, IV–b

99) உலக அளவில் பொருளாதார அடிப்படையில் இந்தியா எந்த இடத்தில் உள்ளது?

A) 5 ஆம் இடம்

B) 6 ஆம் இடம்

C) 7 ஆம் இடம்

D) 8 ஆம் இடம்

100) சீனா ஆண்டிற்கு எத்தனை ட்ரில்லியன் அமெரிக்க டாலர்களை கையாளுகிறது?

A) 5 ட்ரில்லியன் அமெரிக்க டாலர்கள்

B) 6 ட்ரில்லியன் அமெரிக்க டாலர்கள்

C) 7 ட்ரில்லியன் அமெரிக்க டாலர்கள்

D) 8 ட்ரில்லியன் அமெரிக்க டாலர்கள்

101) 2016ஆம் ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி எத்தனை சதவீதமாக இருந்தது?

A) 6.5%

B) 6.6%

C) 6.7%

D) 6.8%

102) உலகப் பொருளாதாரத்தில் ஆசிய குழுமம் எத்தனை சதவீதம் பெற்றுள்ளது?

A) 31.75%

B) 33.84%

C) 27.95%

D) 21.37%

103) உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடுகள் அடிப்படையில் முதல் ஐந்து இடங்களில் இல்லாத நாடு எது?

A) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

B) பிரான்ஸ்

C) ஜெர்மனி

D) சீனா